சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,
மதுரை காசிமகாராஜா பிக்சர் சர்க்யூட் தயாரித்த

தயாளன்

DHAYALAN

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்.

பதிப்புரிமை] 1941. [கம்பெனி

நடிகர்கள்

P. U. சின்னப்பா	....	தயாளன்
T. R. மகாலிங்கம்	....	பாதன்
காளி N. ரத்னம்	....	சடையன்
P. G. வெங்கடேசன்	....	சன்யாசி (படைத்தலைவன்)
K. K. பெருமாள்	....	துன்மதி
S. S. கொக்கோ	....	சொக்கு
T. M. ராமசாமி	....	அற்புதவர்மன் (அரசர்)
E. R. சகாதேவன்	....	பிரதாபன்
B. P. ராமலிங்கம்	....	கிருபாகரர்
V. M. ஏழுமலை	....	வெங்கன்
N. V. கிருஷ்ணன்	....	மாடவியன்

நடிகைகள்

K. V. ஜெயகௌரி	....	பத்மாவதி
P. S. ஞானம்	....	சிலம்பு
C. T. ராஜகாந்தம்	....	அலமு
S. S. பாக்யலக்ஷிமி	....	மனோரமா (அரசி)
ரமணி	....	கனகா
பேபி ஜெயலஷிமி	....	ஏழைச்சிறுமி

நடனம் :— குல்கர்னி & பார்ட்டி

ரோகினி, தனம், பாலா & உஷா

டைரேக்ஷன் :— A. மித்ரதாஸ் B.A.

கதை :— ஸ்ரீ காசி விஸ்வநாத பாண்டியன்

(எட்டியாபுரம் சின்னமகாராஜா)

வசனம் :— குப்புசாமி கவி

பாடல்கள் :— மகாராஜ வாத்தியார்.

சேலம், கோயமுத்தூர், மதுரை, திருச்சி, மலபார், கொச்சி,

திருவாங்கூர், மைசூர், சிலோன், பர்மா,

F. M. S. முதலிய ஜில்லாக்களுக்கு உரிமையாளர்.

உ

சற்வம் சிவமயம்.

தயாளன்

(கதைச்சுருக்கம்)

ஏறக்குறைய அறுநூறு வருஷங்களுக்கு முன் பாரதநாட்டின் தலைநகராகிய இந்திரபுரியை, அற்புதவர்மன் என்னும், அரசர் ஆட்சி புரிந்து வந்தார். அற்புதவர்மரின் மூத்த ராணி, காலம் சென்ற சாவித்திரியம்மாளுக்கு. தயாளன் என்ற ஒரு உத்தமகுண புத்திரன் இருந்தான். பிறகு இளைய ராணியாக வந்த மனோரமாவிற்கும், பரதன் என்ற ஒரு புதல்வனுண்டு. தயாளனும் பரதனும், சகோதர வாஞ்சையில், மிகுந்த பற்றுடையவர்கள். மூத்த இராணி இருக்கும் பொழுதே பத்மா என்னும் ஓர் அனாதைச் சிறுமியை அரசர் அன்புடன் வளர்த்து வருகிறார். தயாளனும் பத்மாவும், இளமையிலேயே அன்புமிகுந்த நட்புடையவர்கள். இருவரும் பருவகாலம் கிட்டியதும். ஒருவர்க்கொருவர் அளவுகடந்த காதலராகிவிட்டார்கள்.

இதுநிற்க, அரண்மனையில் வேலைக்காரனாயிருந்த துன்மதி. தன் வஞ்சக வார்த்தையால், அரசரை வசப்படுத்தி, மந்திரி பதவியடைகிறான். (விதையொன்றுபோட சுரையொன்று முளைக்குமா?) மந்திரியின் குணத்திற்கு ஏற்றவாறு, மகன் பிரதாபனும். தந்தை நடக்கும் தீயவழிகளையே தானும் கைப்பற்றி நடந்து வருகிறான். தந்தையும் தனயனும் நாட்டையே கவர்ந்துக்கொள்ள பேராசைப் பிடித்து, அரச குடும்பத்தையே கெடுத்துவிட பற்பல சூட்ச்சிகளைச் செய்கிறார்கள். நாளடைவில் துன்மதி. அரசரையும், பிரதாபன் தயாளனையும், தங்களுடைய வார்த்தைக்கு இணங்கி நடக்கும் மார்க்கத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள். இவர்களால் ஏற்படும் வரிக் கொடுமையை, பொதுஜன ஊழியரான கிருபாகரர் தர்பாரில் முறையிடுகிறார். ஆனால், அதற்குப் பிரதிபலனாக கிருபாகரரை மந்திரி' தன் சூட்சியால் நாடு கடத்திவிடுகிறான்.

இளைய ராணியும் மந்திரியின் போதனையால் தன் மகன் பரதனுக்குப் பட்டம் கட்ட ஆசைப்பேய்பிடித்து, தயாளனையும், பத்மாவையும் முற்றும் வெறுத்துவிடுகிறாள். ஆனால் எவ்வளவு

கஷ்டத்தை அனுபவித்தாலும், தயாளனும் பத்மாவும், கனகா வென்ற தோழியின் உதவியால், தங்கள் உண்மைக்காதலை மேலும் மேலும் பிரகாசிக்கச் செய்துகொண்டே வருகின்றனர். இவைகளையெல்லாம் அறிந்த துன்மதி, தயாளன் இருந்தால் தன் காரியங்களுக்கு இடையூறாகுமென்று நினைத்து அரசரும் தயாளனை வெறுக்கும்படி செய்துவிடுகிறான்.

கொஞ்சநாள் சென்றவுடன் தயாளன், அரசரைக் கொல்ல வந்ததாகச் சில தந்திரங்கள் செய்துவிடுகிறான். அரசரும் உண்மையென நம்பி, தயாளனுக்கு கொலைதண்டனை விதித்து விடுகிறார். இவ்விஷயத்தை காடு கடத்தப்பட்ட கிருபாகரர் சொக்கு என்ற வேலைக்காரனால் கேள்விப்பட்டு, தயாளனைக் கொலைக்களத்திலிருந்து காப்பாற்றி, தான் இருக்கும் இளவங்காட்டிற்கு அழைத்துச் செல்கிறார். தயாளன் இறந்துவிட்டதாக ஊரெங்கும் வதந்தி நிலவுகிறது. மந்திரியும் இனி நம் இஷ்டம்போல் காரியம் முடிந்ததென்று, கர்வத்துடன், அரச குடும்பத்தார் அனைவரையும் கைது செய்துவிடுகிறான்.

சொக்கு! குரங்காட்டிபோல் நாட்டிற்குவந்து, அரச குடும்பத்தார் ஜெயிலில் இருப்பதை அறிந்துக்கொள்ளுகிறான். உடனே சொக்கு! இலவங்காட்டிற்கு சென்று, தயாளனுக்கும், கிருபாகரருக்கும் தெரிவிக்க, கிருபாகரரின் சகாக்கள் நடுநிசியில் புறப்பட்டு இந்திரபுரிக்கு வருகிறார்கள். துன்மதியின் அட்டூழியம் தாங்காமல், குடிஜனங்களும், அரசரை விடுவிக்க முயற்சிக்கிறார்கள். மந்திரி தான் பட்டம் கட்டிக்கொள்ள வேண்டிய காரியங்களைச் சித்தப்படுத்துகிறான். அன்றிரவு குருவின் வீட்டையடைந்த கிருபாகரர் தயாளன் முதலானோர்கள் தங்களையறிந்துக்கொள்ளாவண்ணம், மாறுவேடம் பூண்டுக்கொண்டு, மறுநாள் தர்பாருக்கு வருகிறார்கள். துன்மதிக்கு முடிசூட்டும் சமயம் துன்மதி கைதி செய்யப்படுகிறான்.

தயாளனைக்கண்ட பிரதாபன், ஓட எத்தனித்து, மெதுவாக நழுவுகிறான். இதையறிந்த சொக்கு பின்தொடர்ந்தே ஓடுகிறான். கடைசியில் மந்திரியும், மகன் பிரதாபனும், என்ன கெதியானார்களென்பதையும், பத்மா அனாதைதானா! என்பதையும் சினிமா ரசிகர்கள் வெள்ளித்திரையில் பாருங்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கோரஸ்.

(கைசா ஜயா என்ற மெட்டு)

பெண்கள் :—ஜெகன் மாயா சகாயா!
நின் சேவை சக்தி தா
தயாபர தேவா சர்வா—ஜே. ஜே. ஜே. (ஜெ)
ஜெகன் மாயா சகாயா
இன்றேகக்கங்கைக் கே
இதேத்தி வாரும் போவோம் நாமேதான்
ஜெகமாயா! சகாயா
மந்தாரை மல்லியே
மஹாமலர் சூடிடுவோமேதான் (ஜெ)

பத்மா :— கோவிது மேலே குங்குமத்தாலே
கோலமிட்டாலே குதூகலமாமே
பால்தருங்காம தேனுவிதாமே.
கோரஸ்:— சங்கராந்திதானே—மங்கள நன்னளே
ஜெக மாயா சகாயா
செஞ் சோலைக் கரும்பே
சுவைதரும் பூஜைக் கினியதாமேதான்
பத்மா :— தினகரநாதா உனதருள் தாதா
இகபர நீதா இசைதர வாதா
சுபகர் வேதா சுகுண தபோதா
கோரஸ்:— சங்கராந்திதானே—மங்கள நன்னளே.

ஜெய கௌரி.

(மாத்த பவன ஜாத்தே—என்ற மெட்டு.)

பத்மா :— ஆனந்தந்தருந்தினமே புவிமீதே
அகமகிழ்வுறும் விதமாவனமே (ஆ)

சோலை—சூழும்

பாரிஜாதமொடு காணும் ரோஜா
பாரினில், வேறெதும், இதற்கிணையாமோ
பொன்னிறவண்டுகள் பூமதுவுண்டு
போகும் ரீங்காரமிதாகுமே
பூமரங்கள் தானிறைந்தே (ஆ)

P. U. சின்னப்பா

இராகம் சயாதரஞ்சனி — ஆதி தாளம்

(பல்லவி)

தயாளன் :—உள்ளமே கவர்ந்து ஏகினுள் எந்தன் (உ)

அனுபல்லவி

பலகோடி சூரியன் ஒளியாய்
பிரகாசித்தே மறைந்தனளன்றோ (உ)

(சரணம்)

கனிவானவாய் மொழியின்பந்தந்த
கனகவிம்பமே காதலின்பமே
இனியோர் பெண்மீதும் ஏகாது என்
மனசாட்சிக்கான மங்கையர்க்கரசி (உ)

T. R. மஹாலிங்கம்

(முஜுக்கோ என்றமெட்டு).

பரதன் :—எனக்கே ஜெயங்கிடைத்ததுவே
எமாந்தனையே நீயே
புஜவீரமே புஜவீரனே க்ஷத்திரியன்
அரசாளத்தகுந்தோனே. (எ)
பூலோகம் போற்றுபவனே
புவிமாந்தரைக் காப்போனே
சாலோக யோகமுடையோன்
சர்வாதிகாரத் தன்யன். (எ)
வேதாகமப்படி முறையே
விதியாவும் அறிவோனே
மூதாதையர் மொழிகடவான்
முடிசூடு மன்னனவனே. (எ)

ஜெயகௌரி

(இஸ்லாம்—என்றமெட்டு)

பத்மா :— அன்பே உமதின் பந்தனையே.
அடியாளடைவேனே
பண்போடுமதிருபாதமே
பணிவேனனுதினமே. (அ)
மாதரசென்னுசைநேச
மங்களாகரனே

மதனின்கணையால் வாடினேன்
மகிபாவருவீரே. (அ)
நாணுடையாளேனே எனை
நாடி யேமகிழ்வீர்
க்லமாய் இணைபிறியேனுமையே
நாயகியாள் தானே. (அ)

P. U. சின்னப்பா & ஜெய கௌரி

(இவிக்கோஸ¯மத்தி—என்றமெட்டு)

தயாளன் :— வனிதாமணியே வாஞ்சையின் கனியே
வசந்த மோஹினியே நீயே (வ)
பத்மா ,— மாதவமாரா மகிமை ப்ரதாபா
மங்களாகரனே மதனமோஹனனே.
தயாளன்:—மான்விழிமாதே நீ வருந்தாதே
பத்மா:—பேதமும் எது பிரிவதும் எது
ப்ரேமையும் நீங்காது உம்மீது
ப்ரேமையும் நீங்காது.

P. U. சின்னப்பா

(பியேஜா பியேஜா என்ற மெட்டு)

தயாளன் :— பிரிய நேசியே யெந்தன்மானே பொற்
கணையாழி தன்னைக்கண்டேனே என் (பி)
ஜீவசிந்தாமணி நீயே எங்
தேகம் அடிமைக்கொண்டாயே
தேவியேமாஜெகன் மோஹினி என் (பி)
மாமத வேட்கையினாலே மன
வேதனையானே ளின்னாளே
தாமதியேன் நேர் வருவேன்
தீங்கனியே நான் தேடியே என் (பி)
தேவாமிர்தமே மந்த மாருதமே
தந்தநின் சிந்தனைக்கி தந்தருமே
திகழ் பூரணமா மதியே
பிரிய நேசி யேயெந்தன் மானே

ஜெயகௌரி

(ஜவானி—என்றமெட்டு)

பத்மா :— இதுபோதே காண்பாளோ
மணவாளன் தன்னையே

என்னுசையும் வீண்போமோ
ஈடேறி மகிழுமா......என்
நாதரிடம் போனுள் நான்
கோறியபடி கூற என் நா
பரமானந்தமே அடைந்தேனே இனி
வேறெதையும் விரும்பேனே
ஆனந்தமாயடைந்தேன்.

P. U. சின்னப்பா & ஜெயகௌரி

(க்யூந்த டேஹோ-என்ற மெட்டு)

தயாளன் :— கோமளமானே குணபூஷணமே
கூவுக்குயிலினமே
பத்மா :— கோறுமன்பே நாமுமிங்கே
கூடநேர்ந்ததுவே க்ருபாகரத்தருவே
தயாளன் :— அன்பினுலே மனமகிழ்ந்தோம்
ஆனந்தமாமே இந்நேரம் ஆனந்தமாமே
பத்மா :— ஜோதிரூபம் போல்விளங்கும்
சுந்தரவதனு
இருவரும் :— இறைவனருளால் இணைபிரியோமே
இன்பசாகரமே.

பேபி ஜெயலக்ஷ்மி

(கிஸ்வீகாராகமெரு—என்றமெட்டு)

ஏழைச்சிறுமி:—காளிங்கநர்த்தனன் யசோதைமகன்
கம்ஸன் தனைவென்ற ராதாகிருஷ்ணன்
ராதாகிருஷ்ணன்
ராதாகிருஷ்ணன்
கோபிகை ரமணன் கோகுல நிபுணன்
கோரும் வரம்தரும் மாதவனே (ரா)
அமரரைக்காத்தோன் அறக்கரையழித்தோன்
அகிலம் ஓரடியாய் அளந்தோன். (ரா)

P. U. சின்னப்பா & ஜெயகௌரி

(ஹுமுஜுஹே என்றமெட்டு)

தயாளன் :— பூஜாபலமிதுதானே என்
பூஜாபலமிதுதானே
புனிதார்த்த மானேனே (என்)

தேசானுகூலமாமா
தெய்வசகாயமிதாமா
சந்த்ரவதன பத்மலோஜனி
தனையென்று காண்பேனோ

பத்மா :— மோஹனனே சுகுமாரா மன
மோஹனனே சுகுமாரா
உமையென்று காண்பேனோ
இனியேவாழேன் யான்சகிப்பேனோ
ஈசனின் திருவுள மிதுவாமோ
ஏங்கியே என்மனம் வாடுதே
ஏதோ மாயமோ

இருவரும்:— பூஜாபல மிதுதானோ என்
பூஜாபலமிதுதானோ
புனிதார்த்த மானேனோ

P. U. சின்னப்பா

(இராகமாலிகை ஆதிதாளம்)

தயாளன்:— முத்துக்கவி சித்தரித்த நந்தலாலாவாணி
பொற்பதக்கம் போன்ற நாட்டில் நந்தலாலா
சத்தியம் நிறைந்து ஓங்க நந்தலாலா உண்மை
வெற்றிக்கொடி நாட்டிடுவாய் நந்தலாலா
கன்னலிலே தேன் சொறியும் நந்தலாலா தமிழ்க்
கழனிவளம் பாற்சொறியும் நந்தலாலா
உன்னதமுடைய நாட்டில் நந்தலாலா வீர
உண்மை நிலை மாற்றிடாதே நந்தலாலா
தேவர்கள் திருக்கண்ணனை நந்தலாலா தமிழ்த்
திரைகடலை நீந்திவந்த நந்தலாலா
மூவேந்தர் ஆண்டநாட்டில் நந்தலாலா நீதி
முறசொலியை மாற்றிடாதே நந்தலாலா

சகாதேவன்

(பெங்கால் மெட்டு ஏகதாளம்.)

பிரதாபன்:—யோகமிது ராஜபோகம் (யோ)
இக்சுகமிதுவே எனக்கின்பம் தருமே
ஏகச்சக்ருதிபன் நானேதான் (யோ)

ஆடையும் அணியும் அதிக அற்புதமே
ஆனந்தமாக நானணிவேனே
ஏகசக்ருதிபன் நானேதான். (யோ)

T. R. மஹாலிங்கம் N. V. கிருஷ்ணன்

(பரதனும்—தோழனும்)

பர :— பரிமளமிகுவன மதிசயமே
பகலவனுழைந்திட இடமில்லையே
பலவிதமரமதின் கிளைகளிலே
பறவைகள் தொனி பல வருவ தைப்பார்!

தோழன்:—இன்பக்குயில் பாடுதே!
இளமயிலாடுதே இசைமொழிக் கிளியும்!
சுவைதர மொழியும்
கொடிபல தோணுதே நேர் அ தோ!
சுந்தரமான விந்தை இன்பக்காட்சியிதே

பர :— ஆஹா! குளிர்ந்த இடமே!
ஆஹா! குளிர்ந்த இடமே!
ஆம்பல் படரும் குளமே
அரவிந்தமலரும் இதழ் வெடித்தளிரும் மிக
ஆனந்தமானதுவே!
மாடாடு மேய்க்கும் பாலர் மகுடி ஊதிட

இருவரும்:-கமுகொடு கதலியின் குலையதைப்பார்
கழனியில் உழவர்கள் உழுவதென் சீர்
அமரர்கள் புகழ் இந்த்ரபுரியதோப்பார்
அரண்மனை தெரியுது துவஜத்தைப்பார்

காளி N. ரத்னம் & C. T. ராஜகாந்தம்

சடை:— வீணனபேராசை ஆகாது உந்தனுக்கு
காசாலே துன்பம் வருமே
இந்தக் காசாலே துன்பம் வருமே

அல:— நீயேண்டித் துடிக்கிறே! யாராலும் என்னையினி
அசைக்கவே முடியாதடி
என்னை அசைக்கவே முடயாதடி

அல:— என்ன ! கெடுதலு சேர்ந்திடுமோ

சடை :— பயப்படுவதில் சுகம்வருமோ !

அல:— இந்தப் பொல்லாத காலத்துக்கெல்லாம்
நமைக்கெடுக்க புறப்படும் நினைச்சுக்கடீ

(சந்தம்)

சடை:— ஏளெ பாளெ வயிறெரிய எய்க்கிருண்டி ஊரே
என்னுடைய கைவரிசைக் காட்டுரண்டி நேரே

அல:— ஆளைக்கண்டா அடுக்குப்பானை இடுக்குக்குள்ளபோறே
ஆறுமில்லெ இன்னுசொன்னு மாறுதட்டிவாரே

சடை:— வீசாதே என்னை நீ லேசா நினைக்காதே
வேறு வேலை வைச்சிருக்கிறேன்
அதுக்கு வேறு வேலை வைச்சிருக்கிறேன்.

காளி N. ரத்னம்

(சின்னிப்பாட்டு)

பஞ்சத்திலடி சின்னி! பரதேசம் போனுண்டி சின்னி!
கஞ்சிக்கு செத்தாண்டி சின்னி! கைக்காசை தோத்தவன் சின்னி!
பல்லையிளிச்சாண்டி சின்னி! பாவமாயிருந்தது சின்னி!
தள்ள முடியலே அவனை தான் கூட்டி போனுண்டி சின்னி!
கூடவந்தவனும் சின்னி! கும்மாளம் போட்டாண்டி சின்னி!
சூடாக உதைகுடுத்து துறத்தி அடிச்தாண்டி சின்னி!
உடம்பை நெளித்துக்கொண்டு ஓடியே வந்தாண்டி சின்னி!
ஓடியே வந்தவன் சின்னி! உலறியேவைச்சாண்டி சின்னி!
உண்மையை நம்பியே சின்னி! உருவமும் குலைஞ்சானே சின்னி!
பண்ணிய கூத்துக்கு சின்னி! பதில்வாங்கப்போருண்டி சின்னி!
பல்லை உடைத்துமே சின்னி! பழிவாங்கப் போருனே சின்னி!
கொல்லைப்புரத்திலே சின்னி! குழிவெட்டிப்புதைப்பானே சின்னி!

காளி N. ரத்னம் & P. S. ஞானம்

சடை:—கண்ணான பெண்ணைக் காணவில்லையே—நான்
என்னதான் செய்வேனே தோணுதில்லையே.

சிலம்:— முன்னமே சொன்னதையே மறந்தே—நீ
இன்னேரம் எங்கேயோ! போயிருந்தே இப்ப
உன்னை ஏமாத்த நான் ஒளிஞ்சிருந்தே

சடை:—செம்பொற் சிலம்பே சிங்கார மயிலே என்
அன்பிற்கிசைந்த ஏ! கருங்குயிலே

சிலம்பு:—பொம்பளே என்றென்னை எய்க்கிறே
வம்பிலே மாட்டிட பாக்கிறே

சடை:—ஆசைக்கிளியே யோசனையேனோ
மோசம் செய்வேனோ நான்

சிலம்பு:—நெசமாவா?

சடை:—நெசமாத்தான்

சிலம்பு:—பாசம் மறக்காத அத்தானே! நம்ப நேசமாயிருப்போம் மச்சானே.

சடை:—மருவுமல்லிகைத் தருகும் வாசனைச் சுகுணச்சுந்தரியே

இருவரும்:—சாமி கிருபையால் நாமினி ஒருயிராய் இருப்போம்
இருப்போம் சந்தோஷமாயிருப்போம்.

பாரதம் 1

காளி N. ரத்னம் & V. M ஏழுமலை

(விருத்தம்)

சுந்தரி ஆனந்த பைரவி லீலி நீ
சுத்தமய ஓங்காரி நீ
சுகமான மலையரசன் மகளும் நீ தாயும் நீ
சூரனை வென்றவளும் நீ

(பாட்டு)

புத்தகக் கையலங்காரியே பசும்
பொன்னும் பணிந்த சிங்காரியே
விட்டகதையதைப்பாடிட்—அம்மா!
சித்தங்களித்து நீ வாருமே.

(சுலோகம்)

தொட்டகதை யுரைக்க—துணைவருவாய் என்தாயே.

(ஏற்றடிச்சந்து)

கேளுமையா! ஓ ஜெனிம ஜேஜெ
கீர்த்தியுள்ள இந்த பாருதத்தை
பாருமையா! ஓ ஜெனிம ஜேஜெ
பஞ்சவர்களுடை தன் கதையே

கையை பிடித்திழுத்துவா!

அந்தப்பாஞ்சாலியை (கை)

ஐவருக்கும் தேவியென்று அகங்காரம் கொண்டவளே!

பைய அழைத்துவந்து, பங்கமே செய்வதற்கு (கை)

(ஓரடி சிந்து)

கச்சை வரிந்து கட்டி கருங்கச்சை சுங்குவிட்டு
பச்சை சல்லடமாட்டி பதக்கம் கழுத்திலிட்டு
வச்சிர வாள்பூட்டி வந்தான் 'பாஞ்சாலியிடம்

(ஓரடிக்கும்மி)

கூட்டத்தின் முன்னே வா ஏ மைத்துனரே
கூடாது இச்சமயம்
தாட்டிகமாய் பேசாமல் ஏ மைத்துனு உன்
தமையனிடம் போய்ச்சொல்வீர்.

(சிங்கார பாட்டு)

ஐவருக்கும் பத்தினியே
அலங்கார பெண்மணியே
அண்ணன் துரியோதனன்
அழைத்துவரச் சொன்னாடி

(பாட்டு—திரிபுடை)

என்னசெய்வேன் ஏதுசெய்வேன் அரிஹரி
இவ்விதிக்கே ஆளானேனே
பாவிப்பயல் துற்சாதனன் அரிஹரி
பற்றியென்னை மயிர் பிடித்து
ஆவிப்போக இழுத்துவந்து அரிஹரி
ஆடையை அவிழ்க்கலுற்றான்

(தெம்மாங்கு லாவணி)

போறாளே என்பொற்சிலம்பு போறாளே
போறாளே பொற்சிலம்பு பூவை சபையைவிட்டு
பூராக்கதையைப் பாடி சீராமுடிப்பதற்குள் (போ)

P. G. வெங்கடேசன்

ப்ரேம்க நாத்த. (ஜுட்டா என்ற மெட்டு.)

மாயவாழ்வே பாராய் (மாய)
காயமேதோ காண்பதேதோ
காணுவாய் இவ்வுலகில் யாவும் (மாய)
மோசம் நாசம்
செய்வது பாவம் தானே
வீணசை யாலேயே
வாழ்வதேனே நாம் பாராய் (மாய)
காற்பதும் கடவுளன்றோ
பாரில் வேறெவராமோ
காண்பதெல்லாம் கனவதுவாமோ
காணமலோடிடுமோ பார்
நாமிதை யறியோமே (மாய)

பெங்கால் டியூன்

P. G. வெங்கடேசன்

(தொகையரு)

நாமே கூடி நாளெல்லாம் உழைத்தோம்
ஏழைகள்போல் என்றுமே
ஏங்கியே துடித்தோம்

(பாட்டு)

ஏனோபிறந்தோம்—குறை
தீருதலைந்தோம்—இது
ஈசன் செயலே—நம்மால்
ஆவது ஒன்றிலையே. (ஏனோ)
மேலதிகாரி மேய்க்குறுன் மாடாய்
உழைப்பது நாமே உன்பதுமவனே
காலமுமாறி கழைகெட்டுப்போச்சு
கோலமுமாறி கூவிடலாச்சு (ஏனோ)

(தொகையரு)

தேசமே வீணய்
தேங்கிடலானதே
நேசராய் வாழ்ந்திட
தேர்ந்திடல் என்றோ. (ஏனோ)

கைவசமுள்ள படங்கள் :—

உத்தமபுத்திரன் (1940-வருட பிலிம் தேர்தலில் முதன்மை ஸ்தானம் பெற்றது)

பக்த கௌரி

தர்மவீரன் (சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்களுக்கு மட்டும்.)

விக்ரம ஊர்வசி	சந்தனத்தேவன்
ராஜயோகம்	மாயா மாயவன்
சதி மகானந்தா	பத்ம ஜோதி
சத்யவாணி	சதி அகல்யா

தயாராகிறது!

அறிவு நூல்புலவர், ராவ்பகதூர்

P. சுந்தரம் பிள்ளை எம். ஏ., அவர்கள் இயற்றியது.

டைரக்ஷன்: T. R. சுந்தரம், B. A., B. Sc., (Leeds.)

"மனோன்மணி"

T. R. ராஜகுமாரி

P. U. சின்னப்பா	N. S. கிருஷ்ணன்
செருகளத்தூர் சாமா	T. A. மதுரம்
T. S. சந்தானம்	காளி N. ரத்னம்
T. S. பாலையா	S. S. கோக்கோ
K. K. பெருமாள்	P. G. வெங்கடேசன்

முதலிய ஒப்பற்ற நடிக, நடிகைகள் நடித்தது.

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ், பிரேமா பிக்சர்ஸ்

தயாரிப்பு.

தமிழ் நாட்டிற்கோர் தனிவிருந்தளிக்கும் இவ்வருடத்தின் இணையற்ற தமிழ்ச்சித்திரம்.

R. C. A. தொனிப்பதிவு டைரக்ஷன் **S. நொடானி**

பாடல்கள் : பாபநாசம்சிவம் — ராஜகோபாலய்யர்.

கதை, வசனம் : அ. வரதநஞ்சைய கவிஞர், **D. V.** சாரி.

உள்ளத்தைஅள்ளும் புண்ணிய புராண சரிதை.

சிவலிங்க சாக்ஷி.

திருவிளையாடலில் ஒரு விளையாடல்.

வன்னியும் கிணறும் லிங்கமுமாகி வழக்குத்தீர்த்த மகிமை.

N. கணேச பாகவதர்
N. நமசிவாயம்
K. K. பெருமாள்
காளி N. ரத்னம்
T. S. துரைராஜ்
V. M. ஏழுமலை
M. R. சுவாமிநாதன்
M. E. மாதவன்

A. K. ராஜலக்ஷ்மி
M. M. ராதாபாய்
T. N. மீனாக்ஷி
P. A. பெரியநாயகி
C. T. ராஜகாந்தம்
T. V. அன்னபூரணி
குமாரி மர்சிலாமணி
மற்றும் பல

உன்னத நடிகர்களின் ஒப்பற்ற தோற்றம்.

உங்கள் அபிமான தியேட்டருக்கு

வெகு விரைவில் விஜயம்.

சேலம் சோழிலானர் பிரஸ், சேலம்.